மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# புறநானூறு காட்டும் ஆட்சி நெறிகள்

# Rules of Governance Shown in Purananuru

கௌசல்யா லட்சுமி ஜெய்சங்கர்/ Kawselya Lechumy Jaishangkar[1]
[1]Undergraduate Student, Sultan Idris Education University
Corresponding Email: kawselyakayal@gmail.com

**ஆய்வுச்சாரம்**

160 புலவர்களின் பாடல்கள் அடங்கியுள்ள சங்க இலக்கியமான புறநானூற்றில் அடங்கியுள்ள ஆட்சி நெறிகளை ஆராய்வதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும். சங்கக்காலத்தில் வாழ்ந்த மன்னர்களிடையே காணப்பட்ட பண்புகளையும் அவர்களது புகழையும் உள்ளடக்கி பாடப்பட்ட 400 பாடல்களுல் ஆய்வாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 3 பாடல்களை மையப்படுத்தியே இந்த ஆய்வு அமையும். அவ்வகையில், சங்கக்கால மன்னர்களிடையே காணப்பட்ட 3 ஆட்சி நெறிகள் பண்புசார் அடிப்படையில் இந்த ஆய்வில் விளக்கப்படும்.

**கருச்சொற்கள்:** புறநானூறு, ஆட்சி, நெறிகள்

**Abstract**

The purpose of this research paper is to examine the political principles contained in Purananuru, a Sanga literature consisting of 160 poet's songs. This study will focus on 3 songs selected by the researcher out of 400 songs that were sung including the characteristics found among the kings who lived in the Sangam period and their fame. In this way, 3 political principles observed among Sangam kings will be explained in this study using qualitative analysis method.

**Keywords:** Governance, Purananuru, Sangam Period

## முன்னுரை

சங்க இலக்கியங்களை அகம், புறம் என இருவகையில் பிரிக்கலாம். காதலைப் பற்றிப் பாடும் பாடல்களை அகம் என்றும், காதலைத் தவிர்த்துப் பிற செய்திகளைப் பாடும் பாடல்களைப் புறம் என்றும் கூறுவர். புறப்பாடல்களானது அகப்பாடல்களைப் போல பெரும்பாலும் கற்பனையாகப் பாடப்பட்டதல்ல. மாறாகச், சங்க கால வரலாற்றை உள்ளடக்கிய பொருட்டே புற இலக்கியப் பாடகள் பாடப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, மலையமான் திருமுடிக்காரியின் சிறு குழந்தைகளைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் யானையின் காலில் இட்டு மிதிக்கச் செய்ய முற்பட்டபோது கோவூர்கிழார் கூறியதால், அக்குழந்தைகள் காப்பாற்றப்பட்டனர் என்ற செய்தியைப் புற இலக்கியப் பாடல்களில் காணலாம். இதன்வழி, சங்க கால வரலாற்றைத் தொகுப்பதற்குச், சங்கப் புறப்பாடல்கள் ஓரளவுக்குத் துணை நிற்கின்றன என்பதை அறியலாம்.

அவ்வகையில், இம்மாதிரியான புறவாழ்க்கையைப் பற்றிக் கூறும் நானூறு செய்யுள்களைக் கொண்டமைந்த நூலானது புறநானூறாகும். புறநானூற்றிலுள்ள சில பாடல்கள், குறிப்பாக இரண்டாம் பாடலானது தொல்காப்பியத்திற்கும் முந்தைய காலத்திற்குரியதாக இருத்தல் வேண்டும் என்பதாகக் கருத்து உள்ளது (நசீர் அலி,பக்கம்17). அதோடு, புறநானூற்றில், பாடல் எண் 267, 268 ஆகியவை கிடைக்கவில்லை என்றும், 266ஆம் பாடலுக்குப் பின்னர் வரும் பாடல்கள் சிலவற்றில் அடிகளும், சீர்களும் சிதைந்துள்ளன என்பதாகவும் வரலாற்றுக் குறிப்பில் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியப்பா என்னும் மரபுகவிதை வகையைச் சேர்ந்த எல்லா புறநானூற்றுப் பாடலின் இறுதியிலும் அப்பாடலின் திணை, துறை பற்றிய இலக்கணக் குறிப்புகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வீரம், கொடை, ஒழுக்கம், கல்வி முதலியவை பற்றி கூறப்பட்டுள்ள புறநானூற்றில் காணப்படும் ஆட்சி நெறிகளை மையப்படுத்தியே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் நோக்கமானது, புறநானூற்றில் காணப்படும் ஆட்சி நெறிகளை ஆராய்வதாகும். மேலும், இவ்வாய்வு நூலக ஆய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நூலக ஆய்வினை மேற்கொள்வதற்குத் தேவையான தகவல்களும் தரவுகளும் அக இலக்கியத்தை மையப்படுத்திய ஆய்வேடுகள், கட்டுரைகள், நூல்களின் மூலம் திரட்டுப்பட்டன. எடுத்துக்காட்டாக, 2020இல் எழுத்தாளர் இரணியன் எழுதிய 'புறநானூறு காட்டும் தமிழர் அறம்' எனும் கட்டுரையில், சங்க காலத் தமிழர்கள் கடைப்பிடித்த அறநெறிகள் விளக்கப்பட்டுள்ளன. அதுபோல, புறநானூற்றை மையப்படுத்திய ஆய்வேடுகள், கட்டுரைகள், நூல்களின் வழி போதுமான தகவல்களும் தரவுகளும் திரட்டப்பட்ட பிறகு, பண்புசார் முறையைப் பயன்படுத்தி இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டது.

## ஆய்வு நெறிமுறைகள்

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**தரவுப் பகுப்பாய்வு**

புறநானூற்றில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான பாடல்களுள் ஒரு மன்னன் எவ்வாறு நல்நெறிகளோடு ஆட்சியாற்ற வேண்டுமென்பதை எடுத்துரைக்கும் பொருட்டுப் பாடப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக, பாண்டிய நாட்டில் பிறந்த அந்தணரான கபிலரால் எழுதப்பட்ட புறநானூற்றின் 8ஆம் பாடலில், ஒரு மன்னன் தன்னுடைய சுயநலத்தினை மையமாகக் கொண்டு இயங்குதல் நல்லாட்சி ஆகாது எனும் கருத்துப் புலப்படுகிறது.

“வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅ
திடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப
ஒடுங்கா வுள்ளத் தோம்பா வீகைக்
கடந்தடு தானைச் சேர லாதனை

யாங்கன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
அகலிரு விசும்பி னானும
பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே”,

எனும் இப்பாடலானது சேரலாதனைப் பற்றி கபிலர் வஞ்சப்புகழ்ச்சி செய்யும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது. இப்பாட்டில் கபிலர், ‘வீங்கு செலல் மண்டிலமே! நீ பகற்பொழுதை உனதாக்கிக் கொள்வாய்! திங்களைக் கண்டு புறமுதுகிட்டு ஓடுகிறாய்! மாறி மாறி வருகிறாய்! மாலையில் மலைமுகட்டில் மறைந்து ஒளிகின்றாய்! நீ பகல் பொழுதில் மட்டும்தான் உன் கிரணங்களைப் பரப்பித் தோன்றுவாய்! இத்தனை குறைகளை உன்னிடம் வைத்துள்ள நீ சேரலாதனுக்கு ஒப்பு எனக்கொள்வது எப்படி? இந்த வையகத்தில் உள்ள அரசர்கள் எல்லோரும் தன் சொல்லுக்குப் பணிந்து நடந்துக்கொள்ள வேண்டும் எனக் கருதி, எல்லா அரசர்களும் சமம் என்னும் பொதுச்சொல்லைப் பொறுக்காமல், பொருளைக் குறைவில்லாது வளங்கும் வள்ளல் தன்மை உடைய சேரலாதனுக்கு நீ எவ்வாறு ஒப்பாவாய்? இஃது உனக்கு ஆகாது’ என்று சூரியனைப் பழிப்பது போல சேரலாதனை வஞ்சப்புகழ் பாடுகிறார். இதன்வழி, தம்முடைய சுயநலத்திற்காக அல்லாது மக்களின் நன்மையை மட்டுமே கருத்தில் கொண்டு கொடை செய்யும் மன்னர்களின் ஆட்சியே நெறியே சிறந்தது எனும் கருத்து புலப்படுகிறது.

தொடர்ந்து, தொண்டி என்னும் ஊரை கி. பி. 200 - 225 காலக் கட்டத்தில் ஆட்சி புரிந்ததாக வரலாற்றில் கூறப்படும் சேர மன்னனை மையப்படுத்திப் பாடப்பட்ட ‘சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை’ எனும் 20ஆம் புறநானூற்றுப் பாடலிலும் ஆட்சி நெறிகள் தொடர்பான செய்திகள் உள்ளன. இதனை அப்பாடலில் இடம்பெற்றுள்ள,

“இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிதுநிலைஇய காயமும், என்றாங்
கவையளந் தறியினு மளத்தற் கரியை

அறிவு மீரமும் பெருங்க ணோட்டமும்
சோறுபடுக்குந் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெற லறியார்நின் னிழல்வாழ் வோரே
திருவி லல்லது கொலைவில் லறியார்

அம்புதுஞ்சுங் கடியரணால்
அறந்துஞ்சுஞ் செங்கோலையே
புதுப்புள் வரினும் புழம்புட் போகினும்
விதுப்புற வறியா வேமக் காப்பினை
அனையை யாகன் மாறே
மன்னுயி ரெல்லா நின்னஞ் சும்மே”,

ஆகிய வரிகளின் வழி புலவர் உணர்த்தும் கருத்தினைக் கொண்டு உறுதிப்படுத்த முடியும். பெரிய கடலின் ஆழம், அகன்ற இவ்வுலகத்துப் பரப்பு, வானத்தில் காற்றுச் செல்லும் திசை மற்றும் வடிவமில்லா நிலைபெற்ற ஆகாயம் என்று சொல்லப்படுபவற்றை அளந்து, அறிந்து கொள்ள முடியும் என்றாலும், அரசனது அறிவும், அன்பு கொண்ட ஈர நெஞ்சமும், பரந்துபட்ட கண்ணோட்டமும் இவ்வளவுதான் என்று வரையறை செய்து அளக்க முடியாத அரியவன் என அரசரின் இயல்பை எடுத்துரைக்கிறது இப்பாடல். அதோடு, சேர அரசரின் ஆட்சிக் குடையின் நிழலில் வாழ்வோர் சோறு சமைக்கும் நெருப்பின் வெம்மையும், செஞ்ஞாயிற்றின் வெம்மையும் அல்லாது வேறு வெம்மை அறியார் என்றும், அம்புகளுக்கு வேலையில்லாது அமைதி கொள்ளும் காவலையுடைய அரணுடன், அறமும் நிலைக்கும் செங்கோலையுடையவர் சேர மன்னன் என்ற தகவல்கள் அவ்வரிகளில் கூறப்பட்டுள்ளன. இதன்மூலம் அளவுகடந்த கொடையுள்ளம், கருணைக்குணம் இருப்பதோடு, அமைதியை விரும்பும் மனநிலை உள்ள அரசனால் மட்டுமே மக்களிடையே நல்லாட்சியை மேற்கொள்ள முடியும் என்பது தெளிவாகிறது.

மேலும், குறுங்கோழியூர் கிழார் எனும் புலவரால் எழுதப்பட்ட புறநானூற்று 22ஆம் பாடலான ‘சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை’ எனும் பாடலிலும் நல்லாட்சி நெறிகள் தொடர்பான தகவல்கள் உள்ளன. அப்பாடலில், ஓர் அரசன் தன் நாட்டில் வளம் பெருவதற்கும் ஆட்சி பரவலுக்கும் உண்டான முயற்சியை எவ்வித வெறுப்பும், சினமும் இன்றி வேற்று நாட்டிற்குப் படையெடுத்துப் படையோடு சென்று தன்னுடைய நாட்டில் வளம் பெருகும்படி செய்து, சோம்பலின்றி ஆட்சி செய்வதே நெறியாகும் என்பதை,

“தினிது கண்டிசிற் பெரும முனிவிலை
வேறுபுலத் திறுக்குந் தானையொடு
சோறுபட நடத்திநீ துஞ்சாய் மாறே”,

எனும் வரிகளின் மூலம் காண முடிகிறது. மக்களின் நலனுக்காகவும் நாட்டின் வளத்திற்காகவும் தம்மாலான முயற்சிகளைக் கைவிடாது மேற்கொள்வதும், தன்னுடைய பணியைச் சோம்பலின்றித் தொடர்ந்து செய்து வருவதுமே நல்லாட்சிக்கு வித்திடும் என்பது இவ்வரிகளின் மூலம் புலப்படுகிறது. அதோடு, அப்பாடலில் இடம்பெற்றுள்ள

“வேந்துதந்த பணிதிறையாற்
சேர்ந்தவர் கடும்பார்த்தும்
ஓங்குகொல்லியோ ரடுபொருந”,

ஆகிய வரிகளின் வழி நல்லியல்பும் ஈகைத்திறனும் கூட சங்க கால மன்னர்களிடையே காணப்பட்ட நல்ல ஆட்சி நெறிகள் என்பதை அறியலாம்.

**நிறைவுரை**

புறநானூற்றில் சங்க கால மன்னர்களிடையே காணப்பட்ட சிறந்த ஆட்சி நெறிகளைப் பிரதிபலிக்கும் பாடல்கள் இன்னும் பல உள்ளன. ஒரு சில பாடல்களுள் நெறி தவறி ஆட்சியை மேற்கொள்ளும் அரசர்களை இடித்துரைக்கும் பொருட்டும் புலவர்களால் புறநானூற்றில் பாடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, அரசவாகையில் பிறரை நோகச் செய்யாத பண்பு, ஆட்சியை விரிவுபடுத்துதல், நாட்டுமக்கள் அச்சமின்றி வாழ்தல், நாட்டில் விழா, வீரம், பகைவர் அச்சம், பகைவர் திறை தருதல், வேள்வி செய்தல் முதலான செய்திகளும் புறநானூற்றில் மிகுதியாகக் கூறப்பட்டுள்ளன. பழந்தமிழ்ச் சான்றோர் தொகுத்துப் பேணிய தமிழ்ச் செல்வங்களுள், புறநானூற்றுத் தொகைநூல் ஒப்பற்ற ஒளிர்மணிக் கோவை ஆகும் (புலியூர்க் கேசிகன்,1958). அவ்வகையில், பல அரிய கருத்துகளையும் வரலாற்றுச் செய்திகளையும் உள்ளடக்கியுள்ள தமிழ்ச் செல்வங்களுள் ஒன்றான புறநானூறானது போற்றதற்குறியதாகும்.

**துணைநூற்பட்டியல்**


Nazir Ali, (2016). “The Purananuru and the Tamil Concept of Valour”, Bharatiya Pragna: An Interdisciplinary Journal of Indian Studies. (Vol.1&pp.30). www.indianstudies.net/v1n3

இரணியன், (2020). “புறநானூறு காட்டும் தமிழர் அறம்”. சிந்தனையாளன் – பொங்கல் மலர். https://www.keetru.com/index.php/2010-06-24-04-33-44/sinthanaiyalan-pongal-malar-2020/39982-2020-04-01-05-27-42

சங்க கால இனக்குழு சமுதாயமும், அரசு உருவாக்கமும் (2004), பெ.மாதையன், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.

புறநானூறு மூலமும் உரையும் (2010), சாரதா பதிப்பகம், சென்னை.

ஜானகிராமன், நா. (2020). “புறநானூற்றுப் பாடல்களில் அறநெறிகள், வாழ்வியல் கூறுகள்”. திண்ணை வாரப்பத்திரிக்கை. https://puthu.thinnai.com/archives/40804